புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்

38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

● மலர்: 01 ● இதழ்: 252 ● 18-03-2026 ● புதன் ● பக்கம்- 4 ● விலை- ரூ.5 ● திருச்சி- புதுச்சேரி

● Volume 01 ● Issue: 252 ● 18-03-2026 ● Wednesday ● Pages - 4 ● Price- Rs. 5 ● Trichy-Puducherry


## ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் நடத்திய தாக்குதலுக்கு இந்தியா கடும் கண்டனம்

டெல்லி: மார்ச்.18–

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள 'ஓமித் போதைப் பொருள் மீட்புமையம்' (OmidAddiction Treatment Hospital) மருத்துவமனை மீது நேற்று (மார்ச் 16)இரவு பாகிஸ்தான் நடத்திய வான்வழித் தாக்குதலில் 400 பேர் உயிரிழந் துள்ளனர். இந்த தாக்குத லுக்கு இந்தியா தனது கடும் கண்டனத் தைப் பதிவு செய்துள்ளது. இத்தாக்குதலை "காட்டு மிராண்டித்தனமான செயல்" எனவிமர்சித்துள்ள இந்திய வெளியுறவு அமைச்சகம், இது ஒரு கோழைத்தனமான மற்றும் மன்னிக்க முடியாத வன்முறை என்று சாடியுள்ளது.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

மார்ச் 16ம் தேதி இரவு காபூலில் உள்ள உமித் போதை மீட்பு சிகிச்சை மருத்துவமனை மீது பாகிஸ்தான் நடத்திய காட்டுமிராண்டித்தனமான வான்வழித் தாக்குதலை இந்தியா திட்டவட்டமாகக் கண்டிக்கிறது. இது ஒரு கோழைத்தனமான மற்றும் மனசாட்சியற்றவன்முறைச் செயலாகும். எந்த வகையிலும் ஒரு இராணுவ இலக்காக நியாயப்படுத்த முடியாத ஒரு மருத்துவமனையில், நடத்தப்பட்ட தாக்குதல் ஏராளமான பொது மக்களின் உயிர்களைப் பறித்துள்ளது. பாகிஸ்தான் இப்போது ஒரு படுகொலையை இராணுவ நடவடிக்கைபோலக்காட்ட முயற்சிக்கிறது.

பாகிஸ்தானின் இந்தக் கொடூரமான ஆக்கிரமிப்புச் செயல்,ஆப்கானிஸ்தானின் இறையாண்மை மீதான அப்பட்டமான தாக்குதலாகவும், பிராந்திய அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு நேரடி அச்சுறுத்தலாகவும்உள்ளது. இது பாகிஸ் தானின் தொடர்ச்சியான பொறுப்பற்ற நடத்தை முறையையும், தனது எல்லைகளுக்கு அப்பால் பெருகிவரும் அவ நம்பிக் கையான வன்முறைச் செயல்கள் மூலம் உள் நாட்டுத் தோல்விகளை மறைக்க மீண்டும் மீண்டும் முயற்சிப்பதையும் பிரதிபலிக்கிறது.

உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்சமூகங்களிடையே அமைதி, சிந்தனை மற்றும் கருணையின் காலமான புனித ரமலான் மாதத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது, இதை இன்னும் கண்டிக்கத் தக்கதாக ஆக்குகிறது. ஒரு மருத்துவமனை யையும் அதன் நோயாளி களையும் வேண்டு மென்றே குறிவைப்பதை எந்த நம்பிக்கையோ, சட்டமோ, அல்லது அற நெறியோ நியாயப்படுத்த முடியாது.

சர்வதேச சமூகம் இந்தக் குற்றச் செயலைச் செய்தவர்களைப் பொறுப்பேற்கச் செய்ய வேண்டும். மேலும், ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் பொது மக்களைக் கண்மூடித்தன மாகத் தாக்குவதை தாமத மின்றி நிறுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

இந்தியா, உயிரிழந்த வர்களின் குடும்பங் களுக்குத் தனது ஆழ்ந்த இரங்கலைத்தெரிவிக்கிறது; காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வாழ்த்துகிறது; இந்தத் துயரமான தருணத்தில் ஆப்கானிஸ்தான் மக்களுடன் உறுதுணை யாக நிற்கிறது. ஆப்கானிஸ் தானின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு எங்களது அசைக்கமுடியாத ஆதரவை மீண்டும் வலியுறுத்துகிறோம் என கூறப்பட்டுள்ளது.

## பல மாதங்கள் தாமதத்துக்குப் பின்பு, நமது விடாமுயற்சிக்குக் கிடைத்த வெற்றி இது: முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு




சென்னை: மார்ச். 18–

தமிழகத்தின் 8 இடங்களில் அகழாய்வு மேற்கொள்ள ஒப்புதல் பெற்றிருப்பதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். கீழடியில் 11வது கட்ட அகழாய்வு நடத்த மாநில தொல்லியல் துறைக்கு ஒன்றிய தொல்லியல்துறை அனுமதி அளித்துள்ளது. தமிழ்நாட்டில் கீழடி உள்பட 8 இடங்களில் அகழ்வாராய்ச்சி நடத்த ஒன்றிய தொல்லியல் துறை அனுமதி அளித்துள்ளது. ஏற்கனவே 5 இடங்கள், தற்போது 8 இடங்களையும் சேர்த்து ஒரே ஆண்டில் 13 இடங்களில் அகழாய்வு நடை பெற உள்ளது. தமிழ்நாட்டில் கடந்த 60 ஆண்டுகளில் ஒரே ஆண்டில் அதிக இடங்களில் அகழாய்வு நடைபெறுவது இதுவே முதல்முறை ஆகும்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது: தொடர் அழுத்தத்தாலும், கடிதங்களாலும் கீழடி உள்ளிட்ட 8 இடங்களில் அகழ் வாராய்ச்சி மேற்கொள்வதற் கான ஒன்றிய அரசின் ஒப்புதலைப் பெற்றுள்ளோம். பல மாதங்கள் தாமதத்துக்குப் பின்பு, நமது விடாமுயற்சிக்குக் கிடைத்த வெற்றி இது. அடுத்து, ஒன்றிய பா.ஜ.க. அரசு வெளி யிடாமல் நிறுத்தி வைத்திருக்கும் கீழடி ஆய்வறிக்கையையும் வெளியிடவைப்போம்!" இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்

## ராமதாஸுக்குப் பின்னடைவு: அன்புமணி மீதான வழக்கு மே 10க்குப் பின் விசாரணை!

சென்னை: மார்ச்.18–

அன்புமணிக்கு எதிராக உரிமையியல் நீதிமன்றத்தில் பாமக நிறுவனர் ராமதாஸ் தாக்கல் செய்த வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க மறுத்த சென்னை உயர் நீதிமன்றம், நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகளின் விசாரணையை மே 10ம் தேதிக்கு பின் மேற்கொள்ள வேண்டும் என உரிமையியல் நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டுள்ளது. இது ராமதாஸுக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது.

பாமகவின் பெயர், சின்னம், கொடியை பயன்படுத்த அன்புமணிக்கு தடை விதிக்கக் கோரி கட்சி நிறுவனர் ராமதாஸ் தரப்பில், சென்னை உரிமையியல் நீதிமன்றத் தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ராமதாஸ் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை நிராகரிக்கக் கோரி அன்புமணி தரப்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அதேபோல, தன்னை வழக்கில் இணைக்கக் கோரி, கட்சி பொதுச் செயலாளர் வடிவேல் ராவணன் தரப்பிலும் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், தனது மனு மீது முடிவெடுக்காத தால், உரிமையியல் நீதிமன்ற விசாரணைக்கு தடை விதிக்கக் கோரி, வடிவேல் ராவணன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றத்தில் ராமதாஸ் தாக்கல் செய்திருந்த வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடை விதித்திருந்தது.

இந்த தடையை நீக்க வேண்டும் என ராமதாஸ் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனு, நீதிபதி டி.வி.தமிழ்ச்செல்வி முன் விசாரணைக்கு வந்தபோது, அன்புமணி தரப்பில், கட்சியின் தலைவராக அன்புமணியை அங்கீகரித்து தேர்தல் ஆணையம் கடிதம் அனுப்பி உள்ளதாகவும், மாம்பழம் சின்னத்தை கட்சிக்கு ஒதுக்கீடு செய்து அன்புமணிக்கு கடிதம் அனுப்பி உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது.

ஏப்ரல் 9ம் தேதி தேர்தலை சந்திக்க உள்ள புதுச்சேரி மாநிலத்தில் நேற்று இரண்டு வேட்பாளர்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள். உச்ச நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தேர்தல் நடவடிக்கைகள் துவங்கிய பிறகு நீதிமன்றம் தலையிடக் கூடாது. அதனால் இந்த வழக்கு களை தேர்தலுக்குப் பிறகு தள்ளி வைக்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி, 'தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு விட்ட நிலையில், உரிமையியல் நீதிமன்றம் எப்படி உத்தரவு பிறப்பிக்க முடியும்? அவசரமாக வழக்கை விசாரிக்க வேண்டிய அவசியம் என்ன? ராமதாஸ் எப்படி தலைவராக தேர்வு செய்யப்பட்டார்? தேர்தல் நடத்தப்பட்டதா?' என சரமாரியாக கேள்வி எழுப்பினார்.

இதற்கு ராமதாஸ் தரப்பில், பிரதான வழக்கில் தன்னை இணைக்க வேண்டும் என்று பொதுச் செயலாளர் மனு தாக்கல் செய்திருக்கிறார். அந்த மனுவுக்கு பதில் மனு தாக்கல் செய்ய தயாராக இருக்கிறோம். இது உள்கட்சி பிரச்சினை, அதற்கும் தேர்தல் நடைமுறைக்கும் எந்த தொடர்பும் இல்லை. வழக்கை தொடர்ந்து விசாரிக்க உரிமையியல் நீதிமன்றத்திற்கு உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, இந்த வழக்குகளில் எந்த உத்தரவு பிறப்பித்தாலும் அது தேர்தல் நடைமுறைக்கு இடையூறாக இருக்கும் எனக் கூறி, உரிமையியல் நீதிமன்ற விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க மறுத்து உத்தரவிட்டார்.

மேலும், உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அனைத்து இடைக்கால மனுக்கள் மீதான விசாரணைக்கும் தடை விதித்த நீதிபதி, அனைத்து வழக்குகளையும் தேர்தல் முடிந்து, மே 10ம் தேதிக்கு பிறகு விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என உரிமையியல் நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

## திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமையில் செய்தியாளர்கள் சந்திப்பு




திருவள்ளூர் மார்ச் 18 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் தலைமையில் செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது. இச்சந்திப்பில் கூறியதாவது : தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் ஞ் 2026, திருவள்ளூர் தேர்தல் மாவட்டத்திற்குட்பட்ட கும்மிடிப்பூண்டி,பொன்னேரி, திருத்தணி, திருவள்ளூர், பூந்தமல்லி, ஆவடி,. மதுரவாயல்,அம்பத்தூர்,மாதவரம் மற்றும்.திருவொற்றியூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் கால அட்டவணையை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அதன்படி அறிவிப்பாணை வெளியிடும் நாள் வேட்புமனு தாக்கல் ஆரம்ப நாள் 30.03.2026 (திங்கள்),வேட்புமனு தாக்கல் இறுதி நாள் 06.04.2026 (திங்கள்),வேட்புமனு பரிசீலனை நாள் 07.04.2026 (செவ்வாய்),வேட்புமனு திரும்ப பெறுவதற்கான இறுதி நாள் 09.04.2026 (வியாழன்), தேர்தல் நாள் 23.04.2026 (வியாழன்),வாக்கு எண்ணிக்கை நாள் 04.05.2026 (திங்கள்),தேர்தல் நடத்தை விதி முடிவுறும் நாள் 06.05.2026 (புதன்)

இந்திய தேர்தல் ஆணையத்தின் மேற்படி தேர்தல் அறிவிப்பாணையை முன்னிட்டு, 15.03.2026 முதல் தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வருகிறது. இதன் தொடர்ச்சியாக அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுவது நிறுத்தப்படுகிறது. மேலும், திங்கள்தோறும் பெறப்படும் மக்கள் குறை தீர்வு நாள் நிகழ்ச்சி, மனு நீதி நாள் நிகழ்ச்சி உள்ள அனைத்து நலத்திட்டம் தொடர்பான நிகழ்வுகளும் மேற்குறிப்பிட்டபடி 06.05.2026 வரை நடத்தப்பட மாட்டாது என தெரிவிக்கப்படுகிறது. இத்தேர்தல் நடத்தை விதிமுறைகள் அனைத்து வேட்பாளர்கள், அரசியல் கட்சியினர், மத்திய மற்றும் மாநில அரசு ஊழியர்களுக்கும் பொருந்தும். மேலும், தேர்தல் தொடர்பான கீழ்க்காணும் புகார்களுக்கு ஊரக பகுதிகளில் தனியார் கட்டிடங்களில் அனுமதி பெறாமல் செய்யப் பட்ட சுவர் விளம்பரங்கள், மாநகரம் / நகராட்சி /பேரூராட்சி பகுதிகளில் உள்ள சுவர் விளம்பரம், வாக்காளர்களை கவரும் வகையில் பொருட்கள், பணம், மதுவகைகள் விநியோகம் செய்தல் மற்றும் ஆயுதம் கொண்டு மிரட்டுதல், வாக்காளர்களுக்கு விநியோகிப்பதற்க்காக பணம் கொண்டு செல்வது தொடர்பாக புகார்கள், வேட்பாளர்களின் தேர்தல் செலவின புகார்கள்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள 24ஙீ7 கட்டுப்பாட்டு அறைக்கு இலவச தொலைபேசியில் 1800 425 8515 மற்றும் 7305158550 என்ற வாட்ஸ்அப் எண்ணுக்கும் தொடர்பு கொண்டு தகவல்கள் அளிக்கலாம். மேலும், மேற்கண்ட புகார்களை கண்காணிக்க ஒரு தொகுதிக்கு மூன்று பறக்கும் படையினர் மூன்று நிலை கண்காணிப்பு குழுவினர் 8 மணி நேர சுழற்சி முறையில் பதினெட்டு (18) குழுவினர் நியமிக்கப்பட் டுள்ளார்கள். இவர்கள் அந்தந்த தொகுதிகளில் தேர்தல் தொடர்பான மேற்கண்ட புகார்களை கண்காணித்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலுக்காக திருவள்ளூர் தேர்தல் மாவட்டத்தில் உள்ள பத்து சட்டமன்ற தொகுதிகளில் 1346 வாக்குச்சாவடி அமைவிடங் களில் 4005 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்தலில் ஆண் வாக்காளர்கள் 1544710, பெண் வாக்காளர்கள் 1612090, மூன்றாம் பாலினத்தவர்கள் 613 ஆக மொத்தம் 3159071 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். மேலும், இத்தேர்தலில் 19220 வாக்குப்பதிவு அலுவலர்கள் 7233 காவல்துறை பணியாளர்கள் மற்றும் 102 நுண்பார்வையாளர்கள் வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நாளன்று தேர்தல் பணியில் ஈடுபட உள்ளனர். மேலும், இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்திரவிற்க்கிணங்க தேர்தல் பணிக்காக மத்திய காவல் ஆயுதப்படையினர் நான்கு கம்பெனி வரப்பெற்றுள்ளது. இதில் 288 ஆயுதப்படையினர் பதற்றமான பகுதி மற்றும் பதற்றமான வாக்குச்சாவடிகளில் பணியமர்த்தப்பட உள்ளனர்.

இத்தேர்தலில், வாக்காளர் / வாக்காளருக்கோ பணம், பொருள் பெறுவதோ / கொடுப்பதோ இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 171ஙின் படி தண்டனைக்குரிய குற்றம் எனவும் இரவு 10 மணிக்கு மேல் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ளக் கூடாது.தேர்தல் ஆணையத்தினால் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளதால் பொது இடங்களில் விளம்பரங்கள் மற்றும் பதாகைகள் 48 மணி நேரத்திற்குள் அகற்றப்பட வேண்டும் மற்றும் தனியாருக்கு சொந்தமான இடங்களில் உள்ள விளம்பரங்கள் மற்றும் பதாகைகள் 72 மணி நேரத்திற்குள் அகற்றப்படவேண்டும். மேலும், திருவள்ளூர் தேர்தல் மாவட்டத்தில் மொத்தமுள்ள 469 படைக்கலன்களை உடனடியாக சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் ஒப்படைக்க படைக்கலன் உரிமையாளர் களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே, வாக்காளர்கள், வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சியினர் இத்தேர்தலை அமைதியாகவும், நியாயமான முறையிலும் நடத்திட அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் கூறினார்.இச்செய்தியாளர்கள் சந்திப்பில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விவேகானந்த சுக்லா, மாவட்ட வருவாய் அலுவலர் ச.சுரேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) டீ.ஸ்ரீராம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மறைந்த தலைவர்களின் உருவச் சிலைகளை மறைக்கத் தேவையில்லை: தேர்தல் ஆணையம் அறிவுறுத்தல்



சென்னை: மார்ச்.18–

மறைந்த தலைவர்களின் உருவச் சிலைகளை மறைக்கத் தேவையில்லை என அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ள

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் வருகிற ஏப்ரல் 23ம் தேதி நடைபெறவுள்ளது. இதனையடுத்து தேர்தல் நடத்தை விதிகள் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாக அமலுக்கு வந்தது. இந்த நிலையில், தமிழக அரசு காபந்து அரசாக அதிகாரம் குறைக்கப்பட்டது. மேலும் தமிழகத்தில் பல்வேறு அரசு அலுவலகங்களில் இருந்த முதலமைச்சர், அமைச்சர்கள், மறைந்த தலைவர்கள் படங்கள் மற்றும் அரசின் சாதனைகள் தொடர்பான புகைப்படங்களும் அகற்றப்பட்டது.

மேலும் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் வைக்கப்பட்ட காமராஜர், அறிஞர் அண்ணா, பெரியார், எம்ஜிஆர், கலைஞர், ஜெயலலிதா உள்ளிட்ட தலைவர்களின் சிலைகளும் மூடப்பட்டது. நேற்று அரசியல் கட்சி தலைவர்களோடு தேர்தல் ஆணையம் ஆலோசனை நடத்தியது. அப்போது சிலைகளை மறைக்க வேண்டாம் என திமுக, சி.பி.எம். உள்ளிட்ட கட்சிகள் தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை வைத்தனர்.

இதனையடுத்து மறைந்த தலைவர்களின் சிலைகளை மறைத்த மறைப்புகளை அகற்ற தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள உத்தரவில், மறைந்த தலைவர்களின் சிலைகளை மறைக்கப்பட்டிருந்தால் அதனை அகற்றும் படி தெரிவித்துள்ளது

# தமிழக வெற்றி கழகத்திற்கு பல்சமய நட்புறவுக் கழகம் ஆதரவு !!





திருப்பூர்: மார்ச் 18

வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் திருப்பூர் தெற்கு தொகுதியில் போட்டியிட தமிழக வெற்றி கழகத்திற்கு பல்சமய நட்புறவுக் கழகம் ஆதரவு தெரிவித்து. தமிழக வெற்றி கழகத்தின் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் குத்புதீன் அவர்களை சந்தித்து பல்சமய நட்புறவுக் கழகத்தின் சார்பாக மாவட்ட மருத்துவ அணி செயலாளர் பாஷா ,வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் முழு ஆதரவை தெரிவித்து கடிதம் வழங்கினார்.

மாவட்டத் தலைவர் ஷாஜகான் கழக பேச்சாளர் கருப்புசாமி பாண்டி ஒன்றிய தலைவர் சந்திரன் மற்றும் இளைஞர் அணி செயலாளர் சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்..

# சேலத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் மாவட்ட தேர்தல் அலுவலரும்,மாவட்ட ஆட்சியருமான ரா.பிருந்தாதேவி தலைமையில் ஆலோசனை கூட்டம்.



சேலம். மார்ச்.18–

சட்டப் பேரவைத் தேர்தலுக்கான தேர்தல் நடத்தை விதிமுறைகள் கடைப்பிடிப்பது தொடர்பாக, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான ரா.பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது.

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் ஆட்சியர் தெரிவித்ததாவது:

தமிழக சட்டப் பேரவைத் தேர்தலுக்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் 15ஆம் தேதி வெளியிட்டுள்ளது. அதன்படி, அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் வேட்பாளர்கள் பின்பற்ற வேண்டிய பொதுவான நெறிமுறைகள், அரசியல் கட்சிக் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தப்படும்போது பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள், வாக்குப்பதிவு நாளன்று பின்பற்ற வேண்டிய விதிமுறைகள், தேர்தல் பிரசார நடவடிக்கைகளின்போது மேற்கொள்ள வேண்டியவை, தேர்தல் அறிக்கைக்கான வழிகாட்டுதல்கள், தேர்தல் நேரத்தில் அறிக்கை வெளியிடுவதற்கான தடை, தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ள காலத்தில் அரசு வாகனங்களை பயன்படுத்த உள்ள தடை, வாகனங்களின் பயன்பாடு உள்ளிட்ட தேர்தல் விதிமுறைகள் தொடர்பாக விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், ஊர்வலங்கள் மற்றும் தேர்தல் பிரசார கூட்டங் களில் ஒலிபெருக்கிகளின் பயன்பாடு, கொடிகளின் பயன்பாடு, தற்காலிக பிரசார அலுவலகம் அமைப்பது, குறுஞ் செய்தி சேவைகள் (எஸ்எம்எஸ்கள்) தவறாகப் பயன்படுத்துவதை தடைசெய்தல், வாக்குச் சாவடிக்குள் அரசியல் கட்சி களின் பெயர்/சின்னம்/பேஜ்கள்/ அடையாளங்கள்/முழக்கங்கள் செய்வது தடை செய்யப் பட்டுள்ளது தொடர்பாகவும், தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் அல்லாத அமைப்புகள் மற்றும் நபர்கள் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்கள் குறித்தும் எடுத்துரைக்கப் பட்டது.

அதேபோன்று, தேர்தல் பிரசாரம் முடிந்த பின்பு தொகுதியில் அரசியல் பிரமுகர்கள் இருப்பதற்கான கட்டுப்பாடுகள், தேர்தல் பணிகளில் குழந்தைத் தொழிலாளர்களை ஈடுபடுத்தாமல் இருப்பது தொடர்பாகவும், ஒவ்வொரு வேட்பாளரும் தேர்தல் செலவுக்காக தனி வங்கிக் கணக்கு தொடங்கவேண்டும் என அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் வேட்பாளர்கள் செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், பிரசார கூட்டங்கள்/ ஊர்வலங்கள்/தற்காலிக கட்சி அலுவலகங்கள் மற்றும் பிரசார வாகனங்களுக்கு அனுமதிபெற கோரும் அரசியல் கட்சிகள்/ அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தங்களது மனுக்களை 48 மணி நேரத்துக்கு முன் இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்திய தேர்தல் ஆணையத் தின் அறிவுறுத்தலின்படி, சேலம் மாவட்டத்தில் தேர்தல் அறிவிப்பு வெளியான 15ஆம் தேதி மாலைமுதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளன. அனைத்து அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் தேர்தல் நடத்தை விதிகளை முறையாக கடைப்பிடித்து, எதிர்வரும் சட்டப் பேரவைத் தேர்தலை அமைதியாக நடத்த ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ரா. ரவிக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் ஷாலினி (பொது), ராஜேஷ் கண்ணா (தேர்தல்கள்), தேர்தல் வட்டாட்சியர் தாமோதரன், அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உள்பட தொடர்புடைய அலுவலர்கள் பங்கேற்றனர்.




ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளராக செல்வி.கிரண் ஸ்ருதி பொறுப்பேற்றுக் கொண்டதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்டத்தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி நேரில் சந்தித்த போது எடுத்த புகைப்படம்.

# வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் வேலை வாய்ப்பு முகாம்..!




வந்தவாசி, மார்ச் 18:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி மற்றும் மேஜிக் பஸ் இந்தியா நிறுவனமும் இணைந்து வேலை வாய்ப்பு முகாம் 2026 ஐ கல்லூரி வளாகத்தில் நடத்தினர். இந்த நிகழ்விற்கு கல்லூரி வேலைவாய்ப்பு அலுவலர் முனைவர் வான்மதி செல்வி வரவேற்புரை நிகழ்த்தினார். கல்லூரி முதல்வர் சி.ருக்மணி தலைமை தாங்கினார். கல்லூரி தலைவர் மு.ரமணன், செயலாளர் பிரியா ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த வேலை வாய்ப்பு முகாமில் 12க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் இருந்து வந்த மனித வள மேலாளர்கள் நேர்காணலை நடத்தினர். இந்த நிகழ்ச்சியில் கல்லூரியில் பயிலும் இளநிலை, முதுநிலை இறுதி ஆண்டு மாணவிகள் 805 பேர் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கான தற்காலிக பணி நியமன ஆணைகளை கல்லூரி தலைவர் மு.ரமணன், முதல்வர் முனைவர் சி.ருக்மணி ஆகியோர் வழங்கினர். இந்த நிகழ்வில் மேஜிக் பஸ் இந்தியா நிறுவன அதிகாரிகள் உடன் பங்கேற்றனர். இறுதியில் கல்லூரி ஆங்கிலத் துறை உதவி பேராசிரியை செல்வி சுபஸ்ரீ நன்றி கூறினார்.

# விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக அவசரசெயற்குழு ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் வடக்கு மாவட்டசெயலாளர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ அறிக்கை

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக அவசரசெயற்குழு ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் ப. சேகர் தலைமையில்



சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர்கள் செஞ்சி கார்த்திகேயன், மயிலம் இள.புகழேந்தி, திண்டிவனம் ஜாஃபர் அலி ஆகியோர் முன்னிலையில் 18.3.2026 புதன்கிழமை காலை 10.00 மணி அளவில் செஞ்சிதிருவண்ணாமலை சாலையில் உள்ள வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள்,பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள்,உள்ளாட்சி மன்ற பிரதிநிதி,தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள்,நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

# ஹோட்டல்களில் உயர்த்தி உள்ள விலைவாசி உயர்வை தமிழக அரசு அதிகாரிகள் நேரடி ஆய்வு செய்து நியாயமான விலைகளை நிர்ணயம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேலூர். மார்ச். 18–

தமிழக வாழ்வுரிமை கட்சி வேலூர் மேற்கு மாவட்ட செயலாளர் வ.வினோத் கண்ணா வெளியிட்டுள்ள அறிக்கை யில் கூறியிருப்பதாவது.



சிலிண்டர் விலை உயர்வு மற்றும் தட்டுப்பாட்டைச் சமாளிக்க, ஏப்ரல் மாதம் முதல் உணவுகளின் விலை 20% முதல் 30% வரை உயரக்கூடும் என்று ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது. ஆனால் அதற்கு மாறாக தற்போது வேலூர் பொறுத்த வரையில் ஆரியபவன், ஆர்யாஸ், அலங்கார் உள்ளிட்ட பல ஹோட்டல்களில் உணவுப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதை பார்க்க முடிகிறது. இதனால் ஏழை எளிய நடுத்தர மக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாக கூடம். எனவே ஹோட்டல்களில் உயர்த்தி உள்ள விலைவாசி உயர்வை தமிழக அரசு அதிகாரிகள் நேரடி ஆய்வு செய்து நியாயமான விலைகளை நிர்ணயம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியிருந்தார்.

# நாம் தமிழர் வேட்பாளர் மீது வழக்குப்பதிவு

அந்தியூர்: தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் அடுத்த மாதம் 23ம் தேதி நடைபெற உள்ளது. இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை 4 மணி முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளது. நேற்று முன்தினம் மாலை முதல் இரவு வரை அந்தியூர் தேர்வீதியில், நாம் தமிழர் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் திருமூர்த்தி தலைமையில், வேட்பாளர் அறிமுக கூட்டம் நடந்தது. ஏற்கனவே காவல்துறையிடம் அனுமதி பெற்று வேட்பாளர் அறிமுக கூட்டம் நடத்திய நிலையில், தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ள நிலையில் அனுமதியின்றி கூட்டம் நடந்ததாக புகார் எழுந்தது.

இதுகுறித்து அந்தியூர் கிராம நிர்வாக அலுவலர் முருகேசன் போலீசில் புகார் அளித்தார். இதைத் தொடர்ந்து, அனுமதியின்றி கூட்டம் நடத்தியதாக ஒருங்கிணைப்பாளர் திருமூர்த்தி மீதும், அந்தியூர் தொகுதி நாதக வேட்பாளர் ஆனந்தி மீதும் அந்தியூர் போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.



வருகின்ற 23.4.26 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026ஐ முன்னிட்டு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்\ மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை வாசகம் அடங்கிய துண்டு பிரசுரத்தை பொதுமக்களுக்கு வழங்கி, விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.




இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தியதை தொடர்ந்து, அதனை கடைப்பிடிப்பது தொடர்பாக திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் தலைமையில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.இதில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விவேகானந்த சுக்லா,ஆவடி மாநகர காவல் இணை ஆணையர் இரா. சிவகுமார்,மாவட்ட வருவாய் அலுவலர் .ச.சுரேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) டீ.ஸ்ரீராம் மற்றும் பல்துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



வேலூர் மலைப் பகுதிகளில் பல வருடங்களாக கோடைகாலத்தில் பறவைகள் மற்றும் சிட்டுக்குருவிகளுக்கு தண்ணீர் வைத்து வருகிறோம் இந்த வருடமும் இந்த பணியை இன்று துவங்கி இருக்கிறோம் அடுத்த மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து தண்ணீர் வைக்கவிருக்கிறோம். இன்று முதற்கட்டமாக வேலூர் செங்காநத்தம் மலைகளில் உள்ள தண்ணீர் தொட்டிகளை நிரப்பி வருகிறோம். இதற்கான முழு செலவையும் ஏற்று வனத்துறை அனுமதியோடு வனத்துறை வழிகாட்டுதலோடு தண்ணீர் தொட்டியை நிரப்பி இருக்கிறோம். நிறைய வன விலங்குகள் இந்த தண்ணீர் தொட்டியை பயன்படுத்தி தாகத்தை தீர்க்கும் என நம்பிக்கை வைக்கிறோம்

# வந்தவாசி வெண்குன்ற மலையில் பரவிய தீ..!



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த வெண்குன்றம் தவளகிரி மலையில் நேற்றைய முன்தினம் மாலை திடீர் தீ பரவியது. இதனால் மலையில் உள்ள மூலிகை செடிகள் உள்ளிட்ட ஏராளமானவை தீயில் கருகியது. மர்ம நபர்கள் யாராவது இதை செய்திருக்கக் கூடும் என்று கூறப்படுகிறது. மேலும் இத்தகைய சம்பவம் தொடர்ந்து பலமுறை நடந்து வருவதால் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் மற்றும் பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் மூன்றாவது அணி

# நாடாளும் மக்கள் கட்சி கூட்டணியில் இணைந்தது

## மற்ற அரசியல் கட்சிகளுடன் கூட்டணி சம்பந்தமாக பேச ஐந்து பேர் கொண்ட குழு அமைப்பு.





புதுச்சேரி மார்ச்.18–

புதுச்சேரி ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் மூன்றாவது அணி அமைக்கப்பட்டது. கூட்டணியில் முதல் கட்சியாக அகில இந்திய கட்சியான நாடாளும் மக்கள் கட்சி இணைந்தது.

புதுச்சேரி ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நேற்று முன்தினம் நான் வெளியிட்ட அறிக்கையில், புதுச்சேரியில் மக்களுக்கான ஆட்சியை உருவாக்க வேண்டும் என்றால் , மக்கள் மீது அன்பு கொண்டவர்கள் எல்லாம் மாற்று கட்சி மற்றும் இயக்கங்களில் மனக்குமுறலுடன் பயணித்து கொண்டிருப்பவரகள் கழக கூட்டணியில் இணைந்து செயல்பட அனைவருக்கும் பத்திரிக்கை வாயிலாக அழைப்பு விடுத்திருந்தேன். அதனை ஏற்று அகில இந்திய நாடாளும் மக்கள் கட்சி கூட்டணியில் இணைந்து செயல்பட விருப்பம் தெரிவித்து அக்கட்சியின் நிறுவனத்தலைவர் திரு. அக்னி செல்வராஜ் அவர்கள் என்னை நேரில் சந்தித்து பேசினார். அப்போது புதுச்சேரியின் நலன் மற்றும் வளர்ச்சியை முன்னிறுத்தி வரும் தேர்தலில் ஒன்றிணைந்து செயல்படுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு, 70 ஆண்டு கால ஏமாற்று அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஒரு புதிய அரசியல் சரித்திரத்தை படைக்க ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைமையை ஏற்று கூட்டணியில் இணைந்து செயல்பட கடிதம் கொடுத்து உறுதிப்படுத்தினார்.

இந்த மூன்றாவது அணியை மேலும் வலுப்படுத்த மற்ற அரசியல் கட்சி , பொதுநல இயக்கங்கள் மற்றும் தொகுதி சமூக ஆர்வலர்களுடன் கூட்டணி பேச்சு வார்த்தை நடத்த ழி.சிவக்குமாரன் தலைமையில் , ஷி. சிவகுமார், ஷி.கோமதிசங்கர், யி. சுப்ரமணியன் ஷி. வாசுகி ஆகிய ஐந்து பேர் உறுப்பினர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர். இந்த குழுவினர் கூட்டணி குறித்து எடுக்கும் முடிவுகள் மாநில தலைவர் ஆர் எல் வெங்கட்ராமன் அவர்களின் ஒப்புதலோடு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் என்பதனை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனி மனிதன் நலனை துறப்போம்.!!!.

புதுச்சேரி நலனை முன்னெடுப்போம்.!!!.

# புதுச்சேரியில் பாஜக உடனான தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தையை புறக்கணித்த முதலமைச்சர் ரங்கசாமி..!

புதுச்சேரி: மார்ச்.18–

புதுச்சேரியில் பாஜக உடனான தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தையை முதலமைச்சர் ரங்கசாமி புறக்கணித்துள்ளார். புதுச்சேரியில் ஆளும் கூட்டணியான என்.ஆர்.காங்கிரஸ் மற்றும் பாஜக இடையே தொகுதிப் பங்கீடு தொடர்பாக நிலவி வந்த நிலையில் இழுபறி தற்போது பகிரங்க மோதலாக வெடித்துள்ளது. பாஜக நிர்வாகிகளுடனான பேச்சுவார்த்தையை முதலமைச்சர் ரங்கசாமி அதிரடியாகப் புறக்கணித்துள்ளது அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் பகுப்பாய்வு

புதுச்சேரி சட்டசபை தேர்தலுக்கான தொகுதிப் பங்கீடு குறித்து ஆலோசிப்பதற்காக, பாஜக மேலிட நிர்வாகிகள் மற்றும் உள்ளூர் தலைவர்கள் முதலமைச்சர் ரங்கசாமியைச் சந்திக்கத் திட்டமிட்டிருந்தனர். இதற்காக பாஜக தரப்பினர் முதலமைச்சர் இல்லத்திற்கு வருகை தந்து, சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக காத்திருந்தனர். ஆனால், அவர்களைச் சந்திக்க முன்வராத முதலமைச்சர் ரங்கசாமி, பேச்சுவார்த்தையைப் புறக்கணித்துவிட்டு அங்கிருந்து கிளம்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது. இதனால் பாஜக நிர்வாகிகள் கடும் ஏமாற்றமடைந்தனர்.

இந்த மோதலுக்கு முக்கியக் காரணமாகச் சொல்லப்படுவது, லட்சிய ஜனநாயகக் கட்சி என்ற புதிய கட்சியை பாஜக கூட்டணியில் சேர்க்க எடுக்கும் முயற்சியாகும். பாஜக மேலிடம் இந்தக் கட்சியைத் தங்கள் அணியில் இணைக்க ஆர்வம் காட்டி வருகிறது. ஆனால், முதலமைச்சர் ரங்கசாமி இதற்குத் தொடக்கத்தில் இருந்தே கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார். ஏற்கனவே உள்ள தொகுதிப் பங்கீட்டில் இது குழப்பத்தை ஏற்படுத்தும் என்பது என்.ஆர். காங்கிரஸ் தரப்பின் வாதமாக உள்ளது.

முதலமைச்சரின் இந்த அதிரடி நடவடிக்கை யினால் புதுச்சேரி ஆளும் கூட்டணியில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. பாஜக உடனான உறவைத் தொடர்வதா அல்லது தனித்துச் செயல்படுவதா என்பது குறித்து ரங்கசாமி தனது கட்சி முக்கிய நிர்வாகிகளுடன் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. மேலும் தேர்தல் நெருங்கும் வேளையில் ஆளும் கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள இந்தத் தொகுதிப் பங்கீடு மோதல், புதுச்சேரி அரசியலில் புதிய திருப்பங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நசரத்பேட்டை தனியார் பொறியியல் கல்லூரியில் சட்டமன்ற பொது தேர்தல் 2026 யை முன்னிட்டு மண்டல அலுவலர்களுக்கான பயிற்சி கூட்டம்



திருவள்ளூர் மார்ச் 18 :

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி வட்டம் நசரத்பேட்டை தனியார் பொறியியல் கல்லூரியில் சட்டமன்ற பொது தேர்தல் 2026 யை முன்னிட்டு மண்டல அலுவலர்களுக்கான பயிற்சி கூட்டம் நடைபெற்றது.கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் பங்கேற்று முழுமையாக பயிற்சி பெற வேண்டுமென சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தியதை தொடர்ந்து, பூவிருந்தவல்லி, திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் பறக்கும் படை மற்றும் நிலை குழுக்கள் வாகனங்களை சோதனையிடும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சட்டமன்ற பொது தேர்தல் 2026 யை முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் தலைமையில் வங்கியாளர்களுடனான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இதில் பூவிருந்தவல்லி தேர்தல் நடத்தும் அலுவலரும் உதவி ஆணையருமான (கலால்) கணேசன், பூவிருந்தவல்லி வட்டாட்சியரும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலருமான உதயம், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ப.ஜெயஸ்ரீ மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 2026 சட்டமன்ற பொதுத் தேர்தல் முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில் அமலாக்கத்துறை அலுவலர்கள் மற்றும் தேர்தல் செலவினங்களை கண்காணிக்கும் முகமை அலுவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வன அலுவலர் பிர்ன்ஸ் குமார் உட்பட பலர் உள்ளனர்.

# தேர்தல் பறக்கும் படையினர் நடவடிக்கை: உரிய ஆவணங்கள் இல்லாமல் எடுத்து சென்ற பணம் பறிமுதல்

சென்னை: மார்ச்.18–

தேர்தல் பறக்கும் படையினர் மேற்கொண்ட சோதனையில் மெரினா உட்பட 3 இடங்களில் லட்சக்கணக்கில் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் 23ம் தேதி நடைபெற உள்ளது.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் நேற்று முன்தினம் மாலை முதல் அமலுக்கு வந்துள்ளன. இதையடுத்து, அரசியல் கட்சிகள், பணம் கொடுத்து வாக்காளர்களை கவர்வதைதடுக்க தேர்தல் ஆணையம் பறக்கும் படைகளை அமைத்துள்ளது.

இந்த பறக்கும் படையினர் முக்கிய பகுதிகளில் கண்காணித்து வருகின்றனர். அதன்படி, மெரினா காமராஜர் சாலையில் அகில இந்திய வானொலி நிலையம் முன்பு சென்னை சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டப்பேரவை தொகுதி பறக்கும் படை பொறுப்பாளர் உதவி செயற்பொறியாளர் திலக் தலைமையில் நேற்று மாலை கண்காணித்தனர்.

அப்போது, அந்த வழியாக வந்த கார் ஒன்றை மறித்து சோதித்தபோது உரிய ஆவணங்கள் இல்லாமல் அதில் ரூ.1.29 லட்சம் இருந்தது தெரிந்தது. அதை பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

விசாரணையில் காரை ஓட்டி வந்த நபர் மயிலாப்பூரை சேர்ந்த கார்த்திக் என்பதும், கட்டுமான பணிக்காக அந்த பணத்தை கொண்டு சென்றதும் தெரியவந்தது. இதேபோல், வில்லிவாக்கம் தொகுதியில் ரூ.1.16 லட்சம், எழும்பூர் தொகுதியில் ரூ.55 ஆயிரம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

உரிய ஆவணங்கள் இல்லாமல் ரூ.50 ஆயிரத்துக்கு மேல் பணம் கொண்டு சென்றால் பறிமுதல் செய்யப்படுகிறது.

# 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் அலுவல் நேரத்தில் அரசியல் விவாதங்களில் ஈடுபட தடை

சென்னை: மார்ச்.18–

தமிழகத்தில் 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் அலுவல் நேரத்தில் அரசியல் விவாதங்களில் ஈடுபட தடை விதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இ.எம்.ஆர்.ஐ. கிரீன் ஹெல்த் சர்வீஸ் நிறுவனம் மூலமாக 108 ஆம்புலன்ஸ் சேவை செயல்படுத்தப்படுகிறது.

மாநிலம் முழுவதும் மொத்தமாக 1,353 ஆம்புலன்ஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆம்புலன்ஸ் வாகனங்கள் அனைத்திலும் தேர்தல் கட்டுப்பாட்டு விதிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இது தொடர்பாக 108 நிர்வாகத்தின் மாநிலத் தலைவர் செல்வகுமார், மண்டலத் தலைவர் முகமது பிலால் ஆகியோர் கூறியதாவது: தேர்தல் காலத்தில் ஆம்புலன்ஸ் வாகனங்களில் மருத்துவ உபகரணங்கள் தவிர வேறு எதையும் எடுத்துச் செல்ல அனுமதியில்லை.

அனுமதி இல்லாத எவரும் ஆம்புலன்ஸில் ஏறக்கூடாது. அங்கீகாரம் பெற்ற ஊழியர்கள், தமிழக அரசு மற்றும் காவல் துறை அதிகாரிகள், தேர்தல் கண்காணிப்பாளர்கள் மட்டுமே ஆம்புலன்ஸ் வாகனங்களை ஆய்வு செய்ய வேண்டும். நோயாளி அல்லது அவருடன் வரும் நபர்கள் ஆம்புலன்ஸில் உள்ள பெட்டிகள், உபகரணங்களை திறக்காமல் இருப்பதை கண்காணிக்க வேண்டும். ஆம்புலன்ஸில் வருவோர் தேர்தல் தொடர்பான பொருள்களை வைத்திருந்தால் அவற்றை அனுமதிக்கக்கூடாது.

நோயாளி மற்றும் அவருடன் வரும் நபர்கள் வைத்திருக்கும் பணம் பற்றிய விவரத்தை ஆவணத்தில் பதிவு செய்ய வேண்டும். பணி நேரத்தில் கட்சிகள் மற்றும் சின்னங்கள் சார்ந்த பொருள்களை வைத்திருக்கக் கூடாது. ஆம்புலன்ஸில் தேர்தல் பிரச்சார ஸ்டிக்கர்கள் அல்லது சின்னங்களை ஒட்டக் கூடாது. அலுவல் நேரத்தில் அரசியல் விவாதங்களில் ஈடுபடுவதற்கு ஊழியர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. தேர்தல் பிரச்சார பொருட்கள் உள்ள இடங்களுக்கு அருகே அவசர சேவை வாகனங்களை நிறுத்தக்கூடாது. ஆம்புலன்ஸ் நிர்வாகத்தின் முன் அனுமதி இல்லாமல் நோயாளியின் புகைப்படம் அல்லது வீடியோ எடுக்க அனுமதிக்கக்கூடாது என பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளோம். இதனை மீறினால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளார்.

# சேலத்தில் பறக்கும் படை அலுவலர்கள் தீவிர கண்காணிப்பு.

சேலம். மார்ச். 18–

சட்டமன்ற தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில் சேலம் மாவட்டத்தில் பறக்கும் படை அலுவலர்கள் தீவிர வாகன சோதனை யில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழக சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் 23ம் தேதி நடக்கிறது.இதனையடுத்து மாநிலம் முழுவதும் தேர்தலுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன. சேலம் மாவட்டத்தை பொறுத்த வரை 11 சட்டமன்ற தொகுதிகளிலும் முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இதனிடையே தேர்தலை முன்னிட்டு வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்கள் விநியோகம் செய்வதை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, மாவட்டத்தில் உள்ள 11 சட்டமன்ற தொகுதிகளிலும் 99 பறக்கும் படை, 33 நிலை கண்காணிப்பு குழுவை அமைத்து மாவட்ட தேர்தல் அதிகாரியான கலெக்டர் பிருந்தாதேவி உத்தரவிட்டுள்ளார்.

இக்குழுவினர் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் சோதனை பணியை மேற்கொண்டு வருகின்றனர். ஒவ்வொரு குழுவிலும் பல்வேறு அரசு துறைகளைச் சேர்ந்த அதிகாரியின் தலைமையில், போலீசார், உதவியாளர்கள், வீடியோ பதிவாளர் ஆகியோருடன் தீவிர கண்காணிப்பில்ஈடுபட்டுவருகின்றனர். குறிப்பாக, தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு அவர்கள் கொண்டு செல்லும் உடைமைகளை ஆய்வு செய்கின்றனர். இதில், ரூ.50 ஆயிரத்திற்கும் அதிகமான பணம் மற்றும் சந்தேகத்திற்கிடமான முறையில் பரிசு பொருட்கள் இருந்தால், அதுகுறித்து விசாரணை நடத்துவதுடன்,அதற்கான ஆவணங் களையும் பரிசோதனை செய்கின்றனர். இதனிடையே, சேலம் வடக்கு தொகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள ஒரு நிலை கண்காணிப்பு குழுவினர் நேற்று காலை கோரிமேடு பகுதியில் தீவிர வாகன தணிக்கை யில் ஈடுபட்டனர்.

அப்போது சேலத்தில் இருந்து ஏற்காட்டிற்கு சென்ற வாகனங்கள் மற்றும் அங்கிருந்து சேலம் வந்த வாகனங் களை தீவிரமாக சோதனை யிட்டனர். இதேபோல், கொண்டலாம்பட்டி, சீலநாயக்கன்பட்டி, சூரமங்கலம் பகுதியிலும் நிலை கண்காணிப்பு குழுவினர் வாகன சோதனையை நடத்தினர். மேலும் பறக்கும் படையினர் அந்தந்த சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதி முழுவதும் சென்று தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# புனித ரமலான் நோன்பு திறக்கும் இஃப்தார் விருந்து சூர்யா நினைவு அறக்கட்டளை சார்பில் நடைபெற்றது.






திருச்சி. மார்ச். 18–

திருச்சி மாவட்டம் வையம்பட்டியில் உள்ள பள்ளிவாசலில் புனித ரமலான் நோன்பு திறக்கும் இஃப்தார் விருந்து சூர்யா நினைவு அறக்கட்டளை சார்பில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு வையம்பட்டி பள்ளிவாசல் ஜமாத் தலைவர் சுலைமான் அவர்கள் தலைமை தாங்கினார்.

இளங்காகுறிச்சி தலைமை இமாம் ஆசிக் ரக்மான் அவர்கள் சிறப்பு சொற்பொழி வாற்றி ரமலான் மாதத்தின் சிறப்பையும் மனிதநேயத்தின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

இதில் சூர்யா நினைவறக்கட்டளை மற்றும் சமூதாயக் கல்லூரியின் நிறுவனத் தலைவர், முன்னாள் வையம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் சூர் யா சுப்ரமணியன் கலந்து கொண்டு பேசுகையில், “லகும் தீனுகும் வலிய தீன் (உங்களுக்கு உங்கள் மார்க்கம், எனக்கு என் மார்க்கம்) என்ற குர்ஆன் வாசகத்தைப் போல மத நல்லிணக்கம் வளர வேண்டும்” என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் ஏராளமான முஸ்லிம் சகோதரர்கள் மற்றும் அனைத்து பொதுமக்கள் கலந்து கொண்டு இஃப்தார் விருந்தில் பங்கேற்றனர்.

# ரமலான் மாதத்தில் ஏழைகளுக்கு கொடுக்கப்படும் ஜகாத், பித்ரா பணத்தை பறிமுதல் செய்யக்கூடாது: ஐயுஎம்எல் வேண்டுகோள்

சென்னை : மார்ச்.18–

ரமலான் மாதத்தில் ஏழைகளுக்கு ஜகாத், பித்ரா கொடுப்பதற்காக முஸ்லிம்கள் எடுத்துச் செல்லும் பணத்தை பறிமுதல் செய்வதை தவிர்க்க வேண்டும் என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரிக்கு அக்கட்சியின் தேசியத் தலைவர் கே.எம்.காதர் மொகிதீன் எழுதியுள்ள கடிதம்: சட்டப் பேரவை தேர்தல் தேதி அட்டவணை வெளியிடப்பட்டதை தொடர்ந்து, தமிழகத்தில் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

பறக்கும் படை அதிகாரிகள் வாகன சோதனை நடத்தி, ரூ.50 ஆயிரத்துக்கு மேல் கொண்டு செல்வோர் மீது நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதனால் சிறு வணிகர்கள், அப்பாவி மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

தற்போது ரமலான் மாதம் என்பதால் முஸ்லிம்கள் அனைவரும் தங்கள் மார்க்க கடமையான ஜகாத், பித்ரா ஆகியவற்றை ஏழைகளுக்கு கொடுத்து வருகின்றனர். குறிப்பாக, ரமலானின் கடைசி 5 நாட்களில் இதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இப்படி ஜகாத் கொடுப்பதற்காக எடுத்துச் செல்லும் பணத்தை பறிமுதல் செய்வதை தவிர்க்க வேண்டும் என்று அன்புடன் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

இதுதொடர்பாக பறக்கும் படை அதிகாரிகளுக்கு உரிய அறிவுறுத்தல் வழங்க வேண்டும். முஸ்லிம்கள் சார்பில் வைக்கப்படும் இந்த கோரிக்கையை பரிசீலனை செய்து நடைமுறைப்படுத்துவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

# ஈரோட்டில் அதிமுக கூட்டணி கட்சிகள் கண்டன ஆர்ப்பாட்டம்.. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டதாக குற்றச்சாட்டு...

ஈரோடு. மார்ச் 18

ஈரோட்டில் அதிமுக அதன் கூட்டணி கட்சிகளின் சார்பில் தமிழக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் ஈரோடு காலை மாட்டு சிலை அருகே நேற்று காலை நடைபெற்றது.



தமிழகத்தில் நாள்தோறும் கொலை கொள்ளை மற்றும் பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் நாள்தோறும் நடைபெற்று வருகிறது. கஞ்சா, போதை மாத்திரைகள், போதை ஊசிகள், போதை சாக்லேட்டுகள் மற்றும் போதை சிகரெட் என தமிழகம் போதை மாநிலமாக மாறி, இளைஞர்கள் இதற்கு அடிமையாகி கெட்டுப் போன நிலையில் பல்வேறு சமுதாய சீர்கேடுகளும் ஏற்படுகிறது.

மேலும் இதன் காரணமாக கண்மூடித்தனமான நிலையில் இளைஞர்கள் கஞ்சா போதையில் சம்பந்தமில்லாமல் கண்ணில் படுபவர்களை அறிவாளால் வெட்டி பெரும் சர்ச்சை நாள் தோறும் ஏற்படுகிறது. போதை பொருட்கள் விற்பனை ஒருபுறம், இந்த போதைகளால் இளைஞர்கள் கெட்டு சீரழிவது ஒரு புறம், சமுதாய சீர்கேடுகள் மற்றும் பெண்கள் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலை உள்ளது என்று இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பேசியவர்கள் தெரிவித்தனர்.

மேலும் சட்டமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு தேர்தல் நடைபெற இருக்கும் நிலையில் திமுக ஆட்சியை அகற்ற வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் கோசங்கள் எழுப்பப்பட்டது.

அதிமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ஈரோடு மாநகர் மாவட்ட அதிமுக செயலாளர் முன்னாள் அமைச்சர் கே வி ராமலிங்கம் தலைமை வகித்தார்.

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி கே வாசன் கலந்து கொண்டு கண்டன சிறப்புரை ஆற்றினார்.

இந்த மேலும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் கே சி கருப்பண்ணன், செல்வராஜ், அதிமுக எம்எல்ஏக்கள் பெருந்துறை ஜெயக்குமார், பவானிசாகர் பண்ணாரி, பாஜக எம்எல்ஏ மொடக்குறிச்சி டாக்டர் சி சரஸ்வதி, முன்னாள் எம்எல்ஏ வி. பி சிவசுப்பிரமணியன், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர் பி. யுவராஜ் உள்ளிட்ட அதிமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் திமுக அரசை கண்டித்து கோசங்கள் எழுப்பப்பட்டது.



நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026ஐ முன்னிட்டு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர கந்தசாமி ஈரோடு மாவட்டம், வீரப்பன் சத்திரம் பகுதியில் பறக்கும் படை குழுவினர்கள் மேற்கொண்டுவரும் வாகனத்தணிக்கை பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.




இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தியதை தொடர்ந்து, அதனை கடைப்பிடிப்பது தொடர்பாக திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் தலைமையில் 10 சட்டமன்ற தொகுதிகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட வருவாய் அலுவலர் .ச.சுரேஷ், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ப.ஜெயஸ்ரீ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) டீ.ஸ்ரீராம் மற்றும் பல்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சட்டப் பேரவைத் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததைத் தொடர்ந்து, சேலத்தில் பறக்கும் படையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

சேலம். மார்ச். 18–

சட்டப் பேரவைத் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததைத் தொடர்ந்து, சேலத்தில் பறக்கும் படையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.



சேலம் மாவட்டத்தில் உள்ள 11 சட்டப் பேரவைத் தொகுதிகளிலும் 33 பறக்கும் படைகள், 33 நிலை கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுவினர் 24 மணிநேரமும் சுழற்சி முறையில் சோதனை பணியை மேற்கொண்டுள்ளனர். மாவட்டம் முழுவதும் பல்வேறு இடங்களில் துணை ராணுவத்தினருடன் இணைந்து, பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்புக் குழுவினர் சோதனை நடத்தி வருகின்றனர்.

மேலும், தேர்தல் குறித்து புகார் தெரிவிக்க இந்திய தேர்தல் ஆணையம் உருவாக்கியுள்ள 'இவிஜில்' செயலியிலும் புகார் அளிக்கலாம். இந்த செயலி மூலம் பெறப்படும் புகார்களின்மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்கள் தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவிக்க கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 425 7020 மற்றும் 1950 ஆகிய எண்களுடன் 24 மணிநேரமும் மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறை இயங்கி வருகிறது.

சுவர் விளம்பரங்கள் எழுத தடை: சேலம் மாநகராட்சி, நகராட்சி/பேரூராட்சிப் பகுதிகளில் பொது இடங்கள் மற்றும் தனியார் இடங்கள் ஆகியவற்றில் விளம்பரம் செய்தல், போஸ்டர் ஒட்டுதல், சுவரில் எழுதுதல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன.

இதையடுத்து, மாநகரப் பகுதிகளில் அரசியல் கட்சியினரின் சுவர் ஓவியங்கள், கட்சியின் போஸ்டர்கள், பெயர்கள், சின்னங்கள் ஆகியவற்றை மாநகராட்சி மற்றும் தூய்மைப் பணியாளர்கள் அழித்தனர்.

அதே நேரத்தில், கிராமப் புறங்களில் தனியார் கட்டடங்களில் தேர்தல் விளம்பரங்கள் செய்வதற்கு தொடர்புடைய நில/கட்டட உரிமையாளர் அனுமதி அளிக்கும்பட்சத்தில், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் விளம்பரம் செய்துகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேலம் தொங்கும் பூங்கா அருகே அரசியல் கட்சியினரின் சுவர் ஓவியங்களை அழித்த மாநகராட்சிப் பணியாளர்கள். அரசியல் கட்சிகளின் சுவரொட்டிகளை அகற்றும் பணியில் ஈடுபட்ட தூய்மைப் பணியாளர்கள்.

# பாலியஸ்டர் நூல் விலை உயர்வால் வரும் 25ம் தேதி முதல் உற்பத்தி நிறுத்தம்: இன்று முதல் 25% விலை அதிகரிப்பு:

## எலாஸ்டிக் உற்பத்தியாளர்கள் அறிவிப்பு

திருப்பூர்: மார்ச்.18–

திருப்பூர் எலாஸ்டிக் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்க ஆலோசனை கூட்டம் நேற்று திருப்பூர் அவினாசி சாலையில் உள்ள தனியார் ஓட்டலில் நடைபெற்றது. இதற்கு சங்கத்தின் தலைவர் கோவிந்தசாமி தலைமை தாங்கினார். செயலாளர் சௌந்தர ராஜன், பொருளாளர் செல்வராஜ் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இது குறித்து சங்க தலைவர் கோவிந்தசாமி கூறியதாவது: அமெரிக்கா, ஈரான் போர் காரணமாக நூல் விலை அபரிமிதமாக உயர்ந்துள்ளது.நூல் விலை கிட்டத்தட்ட 35 சதவீதம், ரப்பர் விலை 15 சதவீதம் உயர்ந்துள்ளதால் எலாஸ்டிக் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. மேலும்,இந்த விலை உயர்வு தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

பாலியஸ்டர் நூல் விலை உயர்ந்து வருவதால் உற்பத்தி முடங்கும் அபாயம் உள்ளது. எலாஸ்டிக் என்று சொல்லக்கூடிய ஓவன் எலாஸ்டிக்கில் பயன்படுத்தப்படும் கலர் நூலான கலர் டைஸ் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், விலை உயர்வு தொடர்கிறது. மேலும், சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக ஓவன் எலாஸ்டிக்கில் பினிஷிங் போடுகின்ற "ஹீட் செட்டிங்" நடைபெற முடியாமல் உள்ளது. இதனால் எலாஸ்டிக் தொழிலில் ஈடுபட்டு வருகிற தொழிலாளர்களுக்கு உணவு வசதி செய்து கொடுக்க முடியவில்லை.

எனவே பாலியஸ்டர் நூல் விலை உயர்ந்து வருவதால் நாளை (புதன் கிழமை) முதல் 50 சதவீதம் உற்பத்தியை குறைக்க உள்ளோம். இதுபோல் வருகிற 25ம் தேதி முழு உற்பத்தியையும் நிறுத்த முடிவு செய்துள்ளோம். இந்த சூழ்நிலையை சமாளிக்க நாளை முதல் 25 சதவீதம் விலை உயர்வையும் அமல்படுத்த உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

# வணிகர் சங்கங்களின் பேரமைப்பு வைத்த கோரிக்கையை ஏற்று உணவு பாதுகாப்பு தரநிர்ணய சான்றிதழ் ஆயுள் உரிமமாக மாற்றம்: விக்கிரமராஜா நன்றி

சென்னை: மார்ச்.18–

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு வைத்த கோரிக்கையை ஏற்று உணவு பாதுகாப்பு தர நிர்ணய சான்றிதழ் ஆயுள் உரிமமாக மாற்றம் செய்ததற்கு அப்பேரவைப் பின் தலைவர் விக்கிரமராஜா நன்றி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: அகில இந்திய அளவில் உணவுத்தரநிர்ணய சான்றிதழ்கள் பெறுவதற்கான நடைமுறையும், அதனை ஆண்டுதோறும் புதுப்பித்தலுக்கான செயல்பாடுகளும் ஒன்றிய, மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றன.



குறிப்பாக உணவுப் பாதுகாப்பு தரநிர்ணய சட்ட அமலாக்கம் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. இச்சட்ட நடைமுறைகளின்படி உணவு தொழிலில் ஈடுபட்டுள்ளோர் உணவுப் பாதுகாப்பு தரநிர்ணய உரிமம் பதிவு செய்யப்படவேண்டியது கட்டாயம். பதிவு செய்யப்பட்ட உரிமத்தை, மாநில அரசின் உணவுப் பாதுகாப்புத்துறை, ஆண்டுதோறும் உரிமக்கட்டணம் பெற்று புதுப்பித்து வந்தது. இந்த நடைமுறை சாமான்ய உணவுப் பொருள் வணிகத்தில் ஈடுபட்டுள்ளோருக்கும், உணவுப் பொருள் வணிகத்தை நெடுங்காலமாக செய்து வருகின்ற விவசாய, வேளாண் விளைபொருள் வணிகர்களுக்கும் கடும் நெருக்கடியையும், உரிமம் புதுப்பித்தலில் உள்ள கால தாமதத்திற்கு அபராதம் கட்டணம் செலுத்தும் சிரமங்களும் இருந்து வந்ததை ஒன்றிய, மாநில அரசுகளின் கவனத்திற்கு தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு எடுத்துச் சென்றதுடன், கடந்த 5 ஆண்டுகளாக மாநாட்டு தீர்மானங்களின் ஒன்றாகவும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடமும் அளித்த கோரிக்கைகளில் ஒன்றாகவும், துறைசார்ந்த அமைச்சர் மற்றும் செயலாளருக்கும் கோரிக்கையுடன் நேரில் சந்தித்து மிகுந்த அழுத்தமும் தரப்பட்டது.

இதன் அடிப்படையில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு வலியுறுத்தி வந்த தீர்மானத்தை ஏற்று, தீர்வு காணும் விதமாக ஒன்றிய அரசு, கடந்த மார்ச் 14 அன்று, ஏப்ரல் 2026 முதல் உணவுப் பாதுகாப்புத் தரநிர்ணயச் சட்டங்களின்படி உணவுப்பாதுகாப்பு உரிமத்தை புதுப்பிக்கத் தேவையில்லை என உணவுப் பாதுகாப்பு ஆணையம் அறிவித்திருப்பது கோடான கோடி உணவுப்பொருள் வணிகத்தில் ஈடுபட்டுள்ள வணிகர்களுக்கு மிகப்பெரும் மகிழ்ச்சியை தந்திருப்பதுடன், சான்றிதழ்கள் புதுப்பித்தலில் உள்ள இடையூறுகள், நெருக்கடிகள் தவிர்க்கப்பட்டிருப்பதை வரவேற்று தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தனது நன்றியையும், பாராட்டுக்களையும் இந்நேரத்தில் பதிவு செய்கின்றது.மாநில செய்திகள்

நகராட்சி, உள்ளாட்சி அமைப்புகளில் பதிவு செய்துள்ள தெருவோர உணவு வியாபாரிகள் இனி உணவுப் பாதுகாப்புத்துறை சட்டத்தின் கீழ் ஏற்கனவே பதிவு செய்துள்ளதே போதுமானது என்றும், மீண்டும் புதுப்பிக்கத் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சலுகை வாயிலாக நாடு முழுவதிலும் உள்ள ஏறத்தாழ 25 லட்சத்திற்கும் அதிகமான தெருவோர உணவு வியாபாரிகள் பயனடைவார்கள். மேலும், புதிய உரிமம் பெற ஆண்டு வருவாய் வரம்புகளும் உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி புதிதாக எஃப்.எஸ்.எஸ்.ஐ பதிவு செய்ய ரூ.1.5 கோடி உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாநில உரிமம் பெற உச்சவரம்பு ரூ.50 கோடியாகவும், மத்திய உரிமம் பெற 50 கோடிக்கு மேல் என்றும் நிர்ணயித்திருப்பது வணிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றிருக்கின்றது. இந்த நடவடிக்கை வாயிலாக அரசு அதிகாரிகளின் தலையீடுகளும் குறுக்கீடுகளும், அத்துமீறல்களும் நிச்சயம் தவிர்க்கப்படும் என பேரமைப்பு எதிர்பார்க்கின்றது. இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கோவையில் வணிக கியாஸ் சிலிண்டர்களை பதுக்கி அதிக விலைக்கு விற்பனை செய்த கியாஸ் ஏஜென்சி உரிமையாளர் கைது!!

கோவை: கோவையில் வணிக கியாஸ் சிலிண்டர்களை குடோனில் பதுக்கி அதிக விலைக்கு விற்பனை செய்த கியாஸ் ஏஜென்சி உரிமையாளரை போலீசார் கைது செய்துள்ளனர். அவிநாசி சாலை லட்சுமி மில் பகுதியில் உள்ள சாந்தி ஏஜென்சிஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் கார்த்திகை கைது செய்த போலீசார் சுமார் 1000 சிலிண்டர்களை பறிமுதல் செய்துள்ளனர்.

## நெல்லை அருகே பயங்கரம்

# காரில் எரிந்த நிலையில் 4 உடல்கள் மீட்பு:

நெல்லை: மார்ச். 18–

திசையன்விளை அருகே ரோட்டிலிருந்து 300 மீட்டர் தூரத்தில் ஒரு காரில் எரிந்த நிலையில் 4 உடல்களை போலீசார் கைப்பற்றினர். அவர்கள் யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர்கள்? என்பது குறித்தும், கடன் பிரச்னையில் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொண்டார்களா? என்பது குறித்தும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். நெல்லை மாவட்டம், திசையன்விளை அருகே பெட்டைகுளத்திலிருந்து ஆற்றங்கரை பள்ளிவாசல் செல்லும் ரோட்டில் இருந்து 300 மீட்டர் பக்கவாட்டில் தரிசு நிலத்தில் இன்று அதிகாலை ஒரு காரில் எரிந்த நிலையில் 4 உடல்கள் இருந்தன.



இதுகுறித்து அந்த வழியாக சென்றவர்கள், திசையன்விளை போலீசுக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து 4 பேரின் உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக நெல்லை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அவர்கள் யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர்கள்? என்ற விவரம் தெரியவில்லை. இறந்தவர்களில் எத்தனை பேர் ஆண், பெண்? என்பது தெரியாத அளவுக்கு உடல்கள் கருகியுள்ளன. கார் எப்படி தீப்பிடித்தது? என்பதும் தெரியவில்லை.

திசையன்விளை பகுதியில் நகை தொழில் செய்பவர்கள் பலர் உள்ளனர். அவர்கள் இங்கிருந்து கோவை, சென்னை உள்ளிட்ட நகரங்களுக்கு நகைகளை செய்து அனுப்பி வருகின்றனர். தற்போது நகை விலை பவுன் ரூ.1 லட்சத்தை தாண்டியுள்ள நிலையில் பலருக்கு நகை வேலைக்கு ஆர்டர் கிடைக்கவில்லை. இதனால் தொழில் நலிவடைந்துள்ளது. இதை நம்பி லட்சக்கணக்கில் கடன் வாங்கியவர்கள் செய்வதறியாது திகைத்து வருகின்றனர். இவ்வாறு நகைதொழிலில் ஈடுபட்டு நஷ்டம் அடைந்த குடும்பம், கடன் பிர்சனையிலிருந்து மீள முடியாமல் காரில் வந்து 'கேஸை' திறந்துவிட்டு தீ வைத்து தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்று போலீசார் சந்தேகிக்கின்றனர். தொடர்ந்து விசாரணை நடக்கிறது. திசையன் விளை அருகே காரில் எரிந்த நிலையில் 4 உடல்கள் கிடந்த சம்பவம், அப்பகுதியில் பெரும் பரபரப்பையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

Published by K.SABIULLA,printed by K.SABIULLA, on behalf of K.SABIULLA, printed at BEAUTIFUL printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:K.SABIULLA, cell.78100-68421